1227

ஓம்.

பரப்ரஹ்மணேயநம:

நவீன பிராமணர்களினுல் பரவியிருக்கும்

அதர்ம குணங்களென்ற அஞ்ஞானகுணங்களை

நீக்குவதற்காக பலநூல்களின் உதவியைக்கொண்டு

ஜீவகாருண்ய தர்மநீதி குணங்கள் என்னும்

# த்விஜப்ரகாசிகா

என்ற புத்தகம், சகலமானவர்களின் உபயோகத்திற்காக

இராயவேலூர் - பசுபுலேட்டி

அரங்கசாமி செட்டி அவர்களால்

தொகுக்கப்பெற்று,

காஞ்சிபுரம், ஆடிசன்பேட்டை தெருவிலிருக்கும்,

வந்தவாசி, பண்டிதர் பிரஹ்மஸ்ரீ

சி. எச். சங்கராச்சாரி அவர்களால்

பார்வையிடப்பட்டு,

இராயவேலூர் :

விக்டோரியா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1919.

விலை ] ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. [அணா 2.

28 MAY 1919

ஓம்.

பரப்ரஹ்மணேயநம꞉.

நவீன பிராமணர்களினுல் பரவியிருக்கும்

அதர்ம குணங்களென்ற அஞ்ஞானகுணங்களை

நீக்குவதற்காக பலநூல்களின் உதவியைக்கொண்டு

ஜீவகாருண்ய தர்மநீதி குணங்கள் என்னும்

# த்விஜப்ரகாசிகா

என்ற புத்தகம், சகலமானவர்களின் உபயோகத்திற்காக

---

இராயவேலூர் - பசுபுலேட்டி

அரங்கசாமி செட்டி அவர்களால்

தொகுக்கப்பெற்று,

காஞ்சீபுரம், ஆடிசன்பேட்டை தெருவிலிருக்கும்,

வந்தவாசி, பண்டிதர் பிரஹ்மஸ்ரீ

சி. எச். சங்கராச்சாரி அவர்களால்

பார்வையிடப்பட்டு,

இராயவேலூர் :

விக்டோரியா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1919.

விலை ] ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. [அண 2.

# விளம்பரம்.

---

சகலமான சகோதரி, சகோதரரவர்களுக்கு தெரிவிப்பது யாதெனில் :—

1-வது அத்தியாய முதல் 29-வது அத்தியாய வரைக்கும், சில சமாதானங்களும், வேதஉபநிஷத்துகளும், தெலுங்கு, தமிழ் சுலோகங்களும், அர்த்தம் உள்பட ஆதாரவிதிகள் இரண்டாம் பாகத்தில் விவரிக்கப்படும்.

இப்படிக்கு,

வே. ய. அரங்கசாமி செட்டி,

நெ. 29, பாஷ்கால் நாயுடு தெரு,

இராயவேலூர்.

459 / 294 15

ஓம்.

பரப்பிரம்மணேய நமஹ.

# முகவுரை.

R6
A119

இப்பூவுலகில் பெருமைபெற்ற பரதகண்ட மாகாணங்களில் வசிக்கின்ற ஆர்யதிராவிட சகோதரி சகோதரரவர்களுக்கு அடியில் கையொப்பமிட்டிருப்பவர் தெரிவித்துக்கொள்ளும் விஞ்ஞாபனம் :—

பூர்வீக சந்திரவம்ச அரசர்களின் சந்ததியைச் சேர்ந்த இராயவேலூர் கௌரவார் தேஸாயிசிரேஷ்டியான, பசுபுலேட்டி கோபால்கிருஷ்ணப்ப செட்டியாருடைய நற்குண வொழுக்கங்கள், கடவுள்பக்தி, சத்தியம், தருமம் முதலியவையும் பொய்யாமையும், எப்பொழுதும் யாவருக்கும் நீதியுள்ள தருமகுணங்களை சொல்லிக்கொண்டும் இருப்பவர். அவர் தன்னால் கூடியவரையில் அன்னியர்களுக்கு நன்மையே செய்துகொண்டும் வீரிய பராக்கிரமசாலியாகவிருந்தும் தன்னுடையநற்குணங்களுடன் ஜீவனத்தின் பொருட்டாக சற்றுமேன்மையுள்ள உத்தியோகம் செய்துகொண்டிருந்த நாளில், தனக்கு மேலதிகாரியாக மதராஸ் இரயில்வேகம்பெனியில் இஞ்சினீராகவும் சீப்இஞ்சினீயராகவும் ஏஜண்ட் அண்ட் மானேஜராகவும் இருந்து வேலையைவிட்டு சீமைக்குப்போன மிஸ்டர் - வெஷ்டுதுரையானவருக்கு கௌரவார் நாயுடுகாரர்களுடைய வம்சம் பூர்வீக சந்திரவம்ச அரசர்களைச் சேர்ந்தவர்களென்று தனக்கு நன்றாகத் தெரிந்திருந்ததில் மேல்சொல்லப்பட்ட கோபால்கிருஷ்ணப்ப செட்டியார் தன் உத்தியோகத்தில் யாவராலும் குற்றம்சொல்லவிடாமல் மெத்தசுறுசுறுப்பாகவேலையிலிருந்ததைப் பற்றியும், யாவரையும் சமமாக பாவிக்கும்படியான சத்தியம் தருமகுணங்களைப்பற்றியும், பொய்சொல்லாதவரென்பதைப்பற்றியும், அரசர்களின் சந்ததியில் சேர்ந்தவரென்பதைப்பற்றியும், மகாகனம்பொருந்திய ஆங்கிலேய கவர்ன்மெண்டாருக்கு 1880-வருஷங்களுக்குமுன் மிஸ்டர் - வெஷ்டுதுரையானவரால் தெரியப்படுத்தி மெத்த கௌரவம்பொருந்திய இராயவேலூர் பசுபிலேட்டி - கோபால் கிருஷ்ணப்ப செட்டியாருடைய குமாரர்களில் ஜேஷ்ட குமாரரான வே. ப. வரதராஜுலு செட்டியார் பிறந்த நக்ஷத்ரத்தின்பலன்களில் முக்கியமானது, ஜாதகனுக்கு பூலோகத்தில் எதிரியில்லையென்றும், அரசனாக வரவேணுமென்றும் அது தவறினால் பிரஹ்மஞானியாகவெளிப்படுவாரென்றபடிக்கு, தான் அதிகமேன்மையாககவர்ன்மெண்ட் பப்ளிக் வொர்க்கு டிபார்ட்டுமெண்டில் இஞ்சினீராக இருந்த வேலையை 1881-வது வருஷத்தில் விட்டு துறவியாகப் போய்விட்டார். மேல்கண்ட துறவியானவருடைய சகோதரன், வே. ப. அரங்கசாமி செட்டி யென்றவ

ரென்னை க்ஷத்திரிய குலஸ்தனென்றதாக சிலர் சொல்லுவார்கள். நான் காலதேச வர்த்தமானங்களைக் கவனித்துச் சாஸ்திரோக்தத்தின்படிக்குப் பார்க்கையில் என்னுடைய உத்தியோகம் சூத்ரகிரியையாதலால் க்ஷத்திரிய குலஸ்தனென்று பாவிக்க ஞாயமில்லை. ஆனால் உயர்ந்த தாழ்ந்த குலங்களுக்கு தரும நீதிப்படி குணவொழுக்கமே காரணமென்றபடிக்கு இப்பூவுலகில் பார்ப்பார்களென்ற நவீன பிராமண பெண்டிர்களும் புருஷர்களும் தங்கள் குலத்தைக் கவனிக்காமல் மற்றவர்களை சூத்திரர்களென்றும் பஞ்சமர்களென்றும் மிகவும் கேவலம் செய்துக்கொண்டு வருவதையும் அதர்மகுணங்களென்ற அஞ்ஞானகுணங்கள் பரவியிருப்பது, தர்ம நீதிக்கு விரோதமானதால், பரமேச்சுவரன் கிருபையால் எனக்கு சில தெரிந்தவரையில் சுருக்கமாகச் சத்தியவேதப் பிரமாணங்களின்படி தர்ம நீதிப்படி பின்வருமாறு எடுத்துக்கூறலாயிற்று.

## 1-வது அத்தியாயம்.

உலகத்திலுள்ள அதிசூத்ர ஸ்ரீபுருஷர்கள்முதலான சர்வத்ரமானிடர்களும் வேதங்களைவாசிக்கலாமென்று கடவுள் ஏற்படுத்தியிருப்பதும், சூத்திரர்கள் வேதங்களை வாசிக்கக்கூடாதெனறும், வாசித்தால் பாவமென்றதாகப் புல்லறிவுள்ள நவீனபிராமணர்கள் மேன்மையாக வருவதற்கு கற்பனையாகச்செய்த வேத சுலோகங்களினால் பயமுறுத்தி வந்ததும் அதர்மமென்றே சொல்லவேண்டும்.

## 2-வது அத்தியாயம்.

ஆதியில் அஞ்ஞானகுணங்களுடன் மானிடர்கள் உத்பவித்து அதாவது சூத்திர ஜனனத்திலிருந்து அவனவனுடைய பாவபுண்ணிய கரமானுசாரப்படிக்கு குணவொழுக்கங்களினால் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களென்பதாகப் பெரியோர்கள் வரையறுத்து அதாவது பாகித்து கணித்துகொண்டுவந்தார்களேயொழிய, பிராமணன் முதலில் பிறந்ததே கிடையாது. குலங்கள் எல்லாம் ஒன்றே என்பதாகவும்.

## 3-வது அத்தியாயம்.

பிராமண ஸ்ரீகளுடைய குணவொழுக்கங்களின் கிரமப்படிக்கு பிராமண ஸ்ரீகளைச் சூத்திரர் முதலான எல்லாப் புருஷர்களும், விவாஹம் செய்துகொள்ளலாமென்றும், சூத்திரர் முதலான ஸ்ரீகளைப் பிராமணர் க்ஷத்திரியர் முதலான புருஷர்களும், விவாஹம் செய்துகொள்ளலாமென்றும், சூத்திரர் வைசியர் பிராமணர்களாகலாமென்றும், பிராமணர் க்ஷத்திரியர் சூத்திரர்களாகலாமென்று வேத சுருதிகளினால் தெரியவருகிறது.

## 4-வது அத்தியாயம்.

பிராமணர்கள் தமது வீடுகளில் சூத்திரர்களைக்கொண்டு அன்ன பதார்த்தங்களைச் சமையல் செய்வித்துப் பிராமணர்கள் புசிக்கவேண்டிய தென்றும் சுருதிகளால் புலனுகும்.

## 5-வது அத்தியாயம்.

இறந்துபோன மாதா பிதா முதலானவர்களுக்கு பார்ப்பானென்ற நவீன பிராமணனை வரவழைத்து சிரார்த்தம், தர்ப்பணம் பலவிதமான தானதருமம் கொடுப்பது பிரயோஜனமில்லை. பாவமென்றும், உயிரோடிருக்கிற மாதாபிதா முதலான மூத்தோர்களுக்குச்சிரார்த்தம், தர்ப்பணம் செய்யவேண்டியதென்றும், இறந்துபோனவர்களுக்கு கும்பிடுவதில் முக்தியில்லையென்றும் தெரியவருகிறது.

## 6-வது அத்தியாயம்.

எவரேனும் ஒழுங்காக சத்திய வேதங்களை அர்த்தஞானத்துடன் வாசித்துத் தன் மனதைத் தருமநீதி ஜீவகாருண்யகுணங்களில் செலுத்திப் பெரியோர்களால் த்விஜன் என்ற பட்டப்பெயர் அடைந்த பிராமணன் தான் கற்ற வேதங்களைத் தானமாக மதபேத வித்தியாசம் வைக்காமல் அனைவருக்கும் கற்பிக்கவேண்டியதென்று சுருதிகளினுல்தெரியவருகிறது.

## 7-வது அத்தியாயம்.

பிராம்மணதன்மையடைந்த பிராமணன் வேதத்தை அத்தியயனம் செய்யாமல் ஜீவனத்திற்காக வேறுவித்தைகளை வாசிக்க பிரயாசப்படுகின்றனே; அவன் வாழ்நாளிலேயே தன் குடும்பத்தோடு சூத்திரனுகின்றான். அதாவது ஜீவனத்திற்காக உத்தியோகம் பார்ப்பதும், பலகார பக்ஷணம் சாப்பாடு விற்பதும், கோவில் பூஜைத் தொழில்களும், செருப்புகள் தோல் கடைவியாபாரமுதலானவைகளும் சூத்திரத்தொழில்களானதுபற்றி அவர்களைப் பிராமணத்துவமுள்ள ஜாதியிலிருந்து நீக்கவேண்டியதென்று பெரியோர்களுடைய சுருதிகளினுல் தெரியவருகிறது.

## 8-வது அத்தியாயம்.

பிராமணனென்ற பெயர் எந்த வருணஸ்தனுக்கும் எப்படிக்கொத்த நீசகுலத்தில் பிறந்தவனுக்கும் அவனவனுடைய நல்லொழுக்கம் ஜீவகாருண்யகுணங்களின் கிரமப்படி கர்மானுஷ்டான பலன்களை விரும்பாமல் ஜாதிவித்தியாசம் வைக்காமல் பகவானுக்குப் பிரியமுள்ள சத்தியம் தர்ம நீதிகுணங்களுடன் பிரஹ்மவித்யையென்னும் வித்யையை அதாவது

பிரஹ்மஞானம் அடைந்தவனுக்கு அதாவது பரீக்ஷையில் தேறினவன் மாத்திரம் பிராமணப்பட்டப்பெயர்அடைந்து மோக்ஷமடைவானென்றும் அப்படிப்பட்ட பிராமணன் தன் உயிரைப்போல் மற்ற பிராணிகளைச் சம பாவனையோடு நடத்தப்பட்டவன் பிரஹ்மகுலத்தவனென்றும், கடவுளுக்குப் பக்தனென்றும், சிநேகிதனென்றும், ஸுஞானியென்றும், உத்தம குலஸ்தனென்றும், சிரேஷ்டனென்றும், யோகி, ருஷி, முனி என்றும் சுருதிகளால் புலனாகும்.

## 9-வது அத்தியாயம்.

சத்துவகுணமுள்ள பிராமணன் எந்தவருணத்திலாவது இருக்கலாம். இக்காலத்தில் அப்படிப்பட்ட ஸுஞானியென்ற பிராமணனைக்கண்டறிய சக்தியற்றவர்களாயிருக்க, பார்ப்பார்களென்ற நவீன பிராம்மண பெண்டிர்களும், புருஷர்களும் எந்தக் குலத்தில் எவரால் பிறந்துவந்தோமென்பதைக் கவனிக்காமல் தங்கள் குலம் உயர்ந்த குலமென்றும் மற்றவர்கள் தாழ்ந்தவர்களென்றும் சூத்திரர்களென்றும் பஞ்சமர்களென்றும் இழிவாக மதனுவஷணை ஜாதிவித்தியாச பேதகுணங்களுடன் தருமநீதிக்கு விரோதமாக அகம்பாவத்தோடு அநேகஜாதிகளாக எற்படுத்தி மற்றவர்களில் ஒருவருக்கொருவர் வித்தியாசமாக நம்பும்படி செய்வித்த பார்ப்பார்கள் தத்துவார்த்த தர்மானுஷ்டானங்களை விட்டு மண் பெண் பொன்னாசையிலகப்பட்டு காம்ய கர்ம குணங்களுடன் குடுமியும் பூணூலுந் தரித்து காயத்ரி ஜப தப அனுஷ்டானங்களை வித்தியாச பேத குணங்களோடுச் செய்து கொண்டு மடி ஆசாரத்துடன் பிராமண வேஷங்கள் பூண்டவரெல்லாம் பிராமணராகமாட்டார்கள். அவர்களை அதி சூத்திரர்களென்றே சொல்லவேண்டும். அஞ்ஞானிகள் சதா பிராமண வம்சமென்று பிராமணபட்டம் வைக்கலாகாது. அது பாவமென்றும் இப்படிப்பட்ட பார்ப்பார்களுக்கு ஜெபங்களில்லையென்றும் சுருதிகளினால் தெரியவருகின்றன. பிராமணர்கள் சூத்திரர்களென்ற பதங்களுக்கு என்ன அர்த்தம் என்பதைச் சிலர் தெரிந்து கவனிக்காமலும் அநேகருக்கு தெரியாமல் அறியாமையிலுமிருக்கிறார்கள்.

## 10-வது அத்தியாயம்.

நவீனபிராமணர்களுடையஅஞ்ஞானகுணங்களின்படிக்கு உலகத்தில் அநேக ஜாதிகள் வித்தியாசத்துடன் எற்படுத்தி வந்திருப்பதைக் கவனிக்கையில் பார்ப்பார்களென்றநவீன பிராமணர்கள், சூத்திரர், பறையர், சக்கிலியர், செம்பட ஜாதிகளுக்குப் பிறந்து வந்திருப்பதாக சுருதிகளினால் தெரியவருகின்றன. நவீன பிராமணர்கள் மேன்மையாக வருவதற்குத் தங்கள் இழிகுலத்தை மறைத்தது தப்பு (1) பார்ப்பார்களுடைய நயவஞ்ச

கத்தாலும் தந்திரங்களினாலும் பிராமணரல்லாதவர்களுக்கு இப்பார்ப்பார்களைப் பிராமணர்களென்றே நம்பும்படி செய்வித்து பிராமண பட்டம் வைக்கதகாததை வைத்துக்கொண்டது தப்பு (2) பார்ப்பார்கள் மேலான குலஸ்தர்களென்றும் மற்றவர்கள் தாழ்ந்தவர்களென்றும் சூத்திரர் சூத்திரச்சிகளென்றுய், பஞ்சமர்களென்றும், பார்ப்பாரப்பெண்டிர்களும், புருஷர்களும் மற்றவர்களை மெத்த கேவலமாக சமயத்துக்கேற்றார்போல் மறைப்பிலும் நேரிலும் சொல்லுவது மற்றவர்களுடைய மனதுக்கு ஆயாசத்தை உண்டுபண்ணும்படி இகழ்ச்சி செய்துகொண்டு வருவூது தப்பு (3).

இவ்விதகுறைவுகளுக்கு இந்து ராஜாக்கள் நீதிகிரமபடிக்கு கவனிக்காமல் இழிகுலப் பார்ப்பார்களை மேன்மையாகப் பிராமணர்களென்று நம்பி பாராட்டி வந்ததில் மற்றவர்கள் பலவிதத்தில் தாழ்மையாக எற்பட்டது அதர்மமல்லவா? மகாகனம்பொருந்திய ஆங்கிலேய துரைகளுடைய ஆட்சியே யாவருக்கும் மேன்மையுள்ள அரசாட்சியாக விருக்கிறது. ஆதலால் இந்துக்களுக்கு எவ்விதபாத்தியமும் ஹோம் ரூலாவது எவ்வளவேனும் அடையக்கூடாதென்று நுட்ப அறிவுள்ள சில இந்துகனவான்கள் தடுத்துக்கொண்டு வருவது எல்லா விவேகிகளும் சந்தோஷப் படத்தக்கதென்றும், இந்துக்களில் ஒருவருக்கொருவர் தாழ்ந்தகுலமென்றும், மேன்மையுள்ள குலமென்றும் மனவருத்தம் உண்டாகும்படியுள்ள ஜாதி வித்தியாசபேத குற்றங்களை 1, 2, 3, என்று குறிப்பிட்டவைகளை இந்துக்கள் கவனிக்காமல் கனம்பொருந்திய ஆங்கிலேய கவர்ன்மெண்டாருக்கு விரோதமாக ஹோம்ரூல் சுதந்திரங்களை கேட்பது நியாயமல்லவென்று யோசிக்காமல் கேட்பது தப்பு (4).

1, 2, 3, 4 என்று குரிப்பிட்ட தப்புகளை கனம் ஆங்கிலேய கவர்ன்மெண்டார் நன்றாக யோசித்து கண்டிப்பதும் தவிர, கவர்ன்மெண்டாருக்கு பிராமணரல்லாதவர்கள் அநேக திரவியம் உதவி செய்துகொண்டும் சண்டைமுனையில் பல தேசங்களிலும் பலதீவாந்தரங்களிலும் அதிக தைரியத்தோடு சண்டைசெய்தும், உயிர்கள்விட்டும், பலவிதத்தில் ஆங்கிலேய கவர்ன்மெண்டார் நாளதுவரையில் உதவிபெற்றுவருவதினால், பிராமணரல்லாதவர்களில் இங்கிலீஷ்பாஷை பரீக்ஷையில் தேர்ந்தவர்களுக்கும் சிலர் திரவிய சகாயமில்லாமல் பரீக்ஷையில் தேராதவர்களும் உத்தியோகம் செய்ய சாமார்த்தியமுள்ளவர்களுக்கு முதலில் எந்த டிபார்ட்டுமெண்டிலும் உத்தியோகம் கொடுக்கவேண்டியதென்றும் பின்னிட்டு நவீன பிராமணர்களுக்கு கொடுக்கலாமென்பதையும் கனம்பெருந்திய ஆங்கிலேய கவர்ன்மெண்டாரும் இந்து ராஜர்களும் கவனிக்கத்தக்கதாம்.

## 11-வது அத்தியாயம்.

பிராமணரல்லாதவர்களில் சிலர் உயர்ந்த குலஸ்தர்களென்றும், சிலர் தாழ்ந்தகுலஸ்தர்களென்றும், பஞ்சமர்களென்றும், கேவலமாகச் சொல்லுவதும் நினைப்பதுமெப்படி ? இஃது அதர்மமல்லவா ? அப்படி ஜாதிகள் வித்தியாசத்தோடு இருக்கப்பட்டவர்களில் (விஸ்வகர்ம ஆசாரிகளும், ஜைன ஜாதிகளும், இலிங்கம்கட்டி சிவாசாரிகளும், பஞ்சமர்களும் மற்றும் சிலரும் தவிர) மற்றஜாதிகளெல்லோருமாகிய நாம் தெரியாமல் பலகலப்புள்ள பஞ்சம ஜாதியில் பிறந்த பார்ப்பார்களென்ற பிராமணர்களை சுபாசுபங்களுக்கு குருவாக வரவழைத்து நடத்திக்கொண்டும் ஊண் முதலியவைகளை அவர்களிடமிருந்து சாப்பிட்டுக்கொண்டுவருவதினால் இப்பூவுலகில் பார்ப்பார்களினால் குலமெல்லாம்கெட்டு ஒன்றாகவிருக்கும்போது நாமெப்படி மற்றவர்களின்மீது ஜாதிவித்தியாச குணங்கள் வைப்பதற்கு இனியாகிலும் உலகத்திலுள்ள பிராமணர்களை யாதொரு காரியங்களுக்கும் அழைக்காமலும், அன்னபானாதிகளும் எடுக்காமலிருக்கவேண்டுமல்லவா ? அப்படிக்கன்றி, மானிடர்களில் தர்மநீதிக்கு விரோதமில்லாமல் குலமெல்லாம் ஒன்றாகபாவித்து சத்தியமாக நடக்கப்பட்டவன் மேலான குலஸ்தனென்றும் ஏற்படுகிறது.

## 12-வது அத்தியாயம்.

ஸ்ரீபகவத்கீதை 9-வது அத்தியாயம் 29-வது சுலோகப்படிக்குப் பகவான் உலகத்திலுள்ள சகல பிராணிகளிடத்தில் யாதொரு வித்தியாசமில்லாமல் சமபாவத்தோடு இருக்கிறாரென்று சொல்லியிருக்க, கடவுளால் படைத்திருக்கும் மானிடர்கள் ஒருவருக்கொருவர் உயர்ந்த குலத்தாரென்றும், தாழ்ந்த் குலத்தாரென்றும் கேவலப்படுத்துவதும் ஜாதிவித்தியாசபேதங்களோடும், மடி ஆசாரமென்ற த்வேஷ குணங்களோடுமுள்ள அதர்மகிரியைகளுடனிருக்கப்பட்ட பெண்டிர் புருஷர்கள் கடவுளிலும் மேலான பத்திமான்களா? அல்லது அஞ்ஞானத்தால் மூடுண்டவர்களா? என்பதைப் புத்திமான்கள் யோசிக்கத்தக்கதென்றும்.

## 13-வது அத்தியாயம்.

உலகத்திலுள்ள பார்ப்பார்களென்ற நவீன பிராமண பெண்டிர்களும் புருஷர்களும் தங்கள் இழிகுலத்தை கவனிக்காமல் மற்ற ஜாதியாரை எப்போதும் வித்தியாசபேதகுணங்களுடன் தூரத்திலிருக்கும்படி வெறட்டிமுடிக்கி தங்கள் வமிச மாத்திரம் விருத்தியும் மேன்மையும் அடையவேண்டுமென்றுள்ள பக்ஷபாத வஞ்சனைகளான அதர்ம குணங்களும் பிராமணரல்லாத இந்துக்களுடைய மனதுக்கு அநேக வருஷகால

மாக நவீன பிராமணர்களினல் அதர்மசாஸ்திரங்களும் குணங்களும், தர்ம குணங்களாகப் பரவி அநீதி நீடித்து வருவதினல் பகவத்கீதை 4-வது அத்தியாயம் 7-வது சுலோகப்படிக்கு, அதர்மங்களைச் சீர்திருத்திப் புத்திகளைக் கற்பிக்கும்படிக்கு ஸ்ரீமான்களாகிய டாக்ட்டர் டி. எம். நாயர் M. D., திவான்பஹதூர் பி. தியாகராய செட்டியரர் இவர்களுடன் சேர்ந்திருக்கும் கணவான்கள் முதலானவர்களைக்கொண்டு கடவுள் அந்தர்யாமியாக தூண்டுதல் செய்வித்து அதர்மமுள்ள நீசகுணங்களைக் கண்டிப்பதைப்பற்றிச் சற்று விவேகியாயுள்ள புத்திமான்கள் சந்தோஷப்படுவார்களாக.

## 14-வது அத்தியாயம்.

பார்ப்பார்கள் பிரஹ்மவமிசமென்றும் பிரஹ்மா முகத்தில் பிறந்தார்களென்றும் பிராமணர்களென்றும் சொல்லுவதும் நினைப்பதும் சுத்த தவருகும். எல்லாரும் பிரஹ்மவமிசமென்று சொல்லுவதே விவேகமாகக் கருதப்படுமென்றும்.

## 15-வது அத்தியாயம்.

தானதர்மங்கள் செய்யப்பட்டவர்கள் மற்றவர்களுக்குக் கொடுப்பதைவிட பிராமணர்களுக்குத் தானதர்மங்கள் கொடுப்பது மேன்மையென்றும் மோக்ஷம் புண்ணியம் வருமென்றும் சொல்லுவதும் நினைப்பதும் சுத்த அஞ்ஞானம்; இவற்றல் யாதொரு பாவமும் நீங்காதென்றும் பயனில்லையென்றும் உணரற்பாலனவாம். எல்லாரையும் சமமாகப்பாவித்துப் பேத புத்தியில்லாமல் தானதர்மங்கள் எவ்விதமாக செய்தாலவை நற்பயன் தருமென்பது ஆராயற்பாலதாம்.

## 16-வது அத்தியாயம்.

உபவாசம் அதாவது விரதம், ஒருபொழுது என்பது என்ன ? வயிற்றிற்கு ஆகாரம் செலுத்தவிடாமல் வயிற்றைப்பசியால் தகிக்கச்செய்து ஒருபொழுது உபவாசம் இருக்கப்பட்டவரெல்லாம் ஊர்ப்பன்றியாகப் பிறக்க வேண்டியதென்றும், உருக்மாங்கத ராஜா உபவாசத்தால் மோக்ஷம் அடைந்தாரென்றது கட்டுக்கதையென்றும் ஏற்படுகிறது.

## 17-வது அத்தியாயம்.

சமாச்சிரயணம், முத்திரைதானம் செய்துகொண்டால் மோக்ஷம், புண்ணியம் அடையலாமென்று பார்ப்பார்களினல் ஏற்படுத்தியிருக்கும் நயவஞ்சக பத்ததிகளைச் சிலர் நம்பிப் பணத்தைக் கொடுத்து விருதாவாக முத்திரைதானம் செய்து கொள்ளுகிருர்கள் என்றல் இரண்டு புஜங்களி

னும் நெருப்பினுல் சூடுபோட்டுக்கொள்ளுகிருர்கள். இதனுல் ஒருபோதும் பாவம் நீங்காதென்பது திண்ணம். அஞ்ஞானமே பெருகச் செய்யும் இதன்றி, கவர்ன்மெண்டில் குடிகளுக்கு வரிகள் விதித்திருப்பதை கொடுப் பதற்கு அவ்வளவாக மனம் வருகிறதில்லே. பார்ப்பார்கள் தங்கள் ஜீவ னத்திற்காக வேண்டி சுகமாகவும் சோம்பேரிகளாக காலம் கழிக்க மற்ற வர்களுடைய பொருள்களை நயவஞ்சகத்தால் பறித்துச் சாப்பிடுவதற்குக் கற்பனையாகச் செய்திருக்கும் புராணங்களையும், சாஸ்திரங்களையும் சமயத் துக்கேற்றாப்போல் சொல்லும் வார்த்தைகளையும் மற்றவர்களுடைய மன தில் நம்பும்படி செய்வித்த பார்ப்பார்களை மற்ற பிராமணரல்லாத இந்து பெண்டிர் புருஷர்களில் 11-வது அத்தியாயத்தில் குறிப்பிட்ட சில ஜாதி கள் தவிர மற்ற ஜாதிகள் நம்பித்தாமாய் வலுகட்டாயமாகப் பார்ப்பார பிராமணர்களை அழைத்து (கவர்னமெண்டில் பலவித வரிகளை விதித் திருப்பதைவிட) பலவிதச்சடங்குகளுக்குப் பலவித பொருள்கள் கொடுத்து இழிகுலமென்றும் சூத்திரர் சூத்திரச்சிகளென்றும் கேவலமுள்ள பட்டப் பெயர்களும், அஞ்ஞானமும், பாவத்தையும் அடைந்து கொண்டுவா வேண்டியதே தவிர வேருெரு பயனில்லே யென்பதற்கு ஆதாரவிதிகள் காட்டியிருப்பதைக் கவனிக்கவேண்டியதாம்.

## 18-வது அத்தியாயம்.

யஞ்ஞங்களிலாவது அல்லது மற்ற எவ்விதக் காரியங்களிலாவது ஆடு களையும், மாடுகளையும் ஜீவஹிம்சை செய்யக்கூடாது. அப்படிச் செய்கிறவர் களுக்கு நரகமே யொழிய வேறு பயனில்லேயாம்.

## 19-வது அத்தியாயம்.

புத்திரனுல் மாதா பிதாக்கள் மோக்ஷம் அடையலாமென்றும், புத் திரனில்லாத மாதாபிதாக்கள் மோக்ஷமடையமாட்டார்களென்றும் சொல் லப்பட்டிருப்பது மூடறிவைச் சேர்ந்தது. ஆனுல் புத்திரனென்ருல் யார்? எந்தப் புத்திரனுல் மோக்ஷம் அடையலாமென்று ஞான சாஸ்த்தி ரங்களைக்கொண்டு ஆராயவேண்டும்.

## 20-வது அத்தியாயம்.

கங்காதிதீர்த்த ஸ்நானம் செய்தால் மோக்ஷம் புண்ணியமென்று சொல்லுவது முற்றிலும் தவருகும். அதனுல் ஒருவனுடைய பாவம் நீங்காது.

## 21-வது அத்தியாயம்.

அந்தந்த வருணஸ்தர்கள் அந்தந்த வருணாச்சிரம தர்மக்கிரமப்படிக்கு நடக்கவேண்டுமென்றுள்ள பேத புத்தியுடன் புத்தியைப் பிரவேசிக்கச் செய்யப்பட்டவன் பரமாத்மாவைக் காணமாட்டான். அதாவது அஞ்ஞானியாவானென்று கருதவேண்டும்.

## 22-வது அத்தியாயம்.

பெண்டிர்கள் மாதவிடாய் காலத்தில் முட்டுதீட்டென்றும், ஜல ஸ்நானத்தால் தீட்டுப் போய்விட்டதென்றும், ஜல ஸ்நான மில்லாதிருந்தால் தீட்டென்றும் சொல்லுவது அவிவேகமுள்ளதாம்.

## 23-வது அத்தியாயம்.

பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் வித்தியாசமாக நடத்தும் மரியாதைத்தன்மைகள் நீதிக்கு விரோதமல்லவா ?

## 24-வது அத்தியாயம்.

எவனொருவன் தன்னுடன் பிறந்தவர்களுக்கு உதவி செய்யாதவனோ, அவன் கழுதையாவானென்றும், அவன் மாதாபிதாவிடமும், கூடப்பிறந்த அண்ணனிடமும் தர்ம நீதிமரியாதையுடன் நடக்கவேண்டுமென்றும் அறியற்பாலனவாம்.

## 25-வது அத்தியாயம்.

பெண்டிர்கள் தங்கள் கணவனை கடவுளைப்போல் பாவித்து அதிக பயபக்தியுடன் நடக்கவேண்டிய மரியாதைத்தன்மையும், புருஷர்கள் தங்கள் மனைவியிற்கு நீதிக்கு விரோதமுள்ள கெடுதிகளைச் செய்யாமல் அதிக பக்ஷத்துடன் பார்க்கவேண்டியதென்றும் உள்ளத்திலமைக்கவேண்டும்.

## 26-வது அத்தியாயம்.

பார்ப்பார்களிப்போது அநேக தெய்வ ஸ்தலங்களில் சிவன், விஷ்ணு முதலான் ஆலயங்களில் பூசாரி அர்ச்சகர்களாக இருந்துவரும் பிராமணர்களே பூசாரிகளாக இருக்கவேணுமென்ற பத்ததிகளில்லை. பிராமணரல்

லாதவர்களில் மாம்சம் புசிக்காதவர்களாகவும் சற்று நீதிக்கஞ்சி பக்தியோடுள்ளவர்களைக்கொண்டு கோவில் அர்ச்சக பூசைகளை நடத்தலாம். அல்லது பிராமணரல்லாத இந்துக்களையும் பார்ப்பார்களென்ற நவீன பிராமணர்களையும் ஒவ்வொருமாதம் முறைப்படிக்கு பூசாரிகளாக நியமித்து நடத்துவதில் பார்ப்பார அர்ச்சகர் முதலான பெண்டிர்கள் புருஷரவர்களுக்கிருக்கும் சில கல்நெஞ்சமுள்ள தீயகுணங்கள் நீங்குமென்பது தர்ம நீதிக்கு ஒத்ததாம். அவ்விதமாக பிராமணரல்லாத இந்துக்கள் தக்க முயர்சிகள் எடுத்து பிராமணர்கள் ஞாயத்திற்கு கட்டுபடாமலுள்ளது நீதிக்கு விரோதமென்றும், பிராமணரல்லாத இந்துக்களுக்கு ஞாயம் செலுத்த சாமார்த்தியமில்லை என்றும் கேவலமாகவே வந்துவிடுவார்களென்பது உண்மை. அப்படிப்பட்ட கோவில்களுக்கு பிராமணரல்லாத இந்துக்கள் போகாமலிருப்பதே மிகவும் நன்மை என்பதற்கு 27, 28, 29 அத்தியாயத்தில் கவனிக்கத் தக்கதுள்ளதாம்.

## 27-வது அத்தியாயம்.

கடவுளுக்குப் பிரியமுள்ள ஸத்கர்மங்களென்ற தரும நீதிகுணங்களுடனும் கடவுளால் படைக்கப்பட்ட கோவிலில்வசிக்கும் கடவுளை உபாசித்து முக்தியடையலாமென்றுள்ள நீதி மார்க்கங்களை உலகத்தாருக்குபோதித்து வழக்கத்திற்கு கொண்டுவராமல், வேதங்களைப் பார்ப்பார்களென்ற நவீன பிராமணர்கள் மாத்திரம் வாசிக்கவேண்டியதென்றும், மற்றவர்கள் வாசிக்கக்கூடாதென்றும், காதுகளினாலும் கேழ்க்கப்படாதென்று பலவிதத்தில் பயப்படுத்தி மற்ற ஜாதிகளை அறியாமையில் அமிழ்த்திக்கொண்டுவந்து, கடவுள் எங்கும் இருக்கிறாரென்று சொல்லப்பட்டிருப்பதை யொருயாதாரமாகக்கொண்டு, பார்ப்பார்கள் சுகமாகவும், மேன்மையாகவும், மற்றவர்களுடைய பொருள்களினால் சோம்பேரிகளாகவுமிருந்து ஜீவனம் செய்வதற்காகவேண்டியே பகட்டாக மேல்சொல்லிய கடவுள் எங்குமிருக்கிறாரென்ற ஆதாரவிதியை பூலோகத்தில் மூடபக்தியுள்ள இந்துராஜாக்களுக்கும், மற்றவர்களுக்கும் காட்டி கோவில் கோபுரங்களைக் கட்டுவித்தும் விக்கிரகங்கள் செய்வித்தும் அவைகளுக்கு வேண்டிய மானியங்களை ராஜாக்களினால் விடும்படி செய்வித்தும் மற்ற மூட ஜனங்கள் பலவித பொருள்களினால் கோவிலுக்கு வந்து விக்கிரக பூசைகள் செய்துகொண்டுவந்தால் எளிதில் அவரவர்களுடைய பாவ கிருத்தியங்கள் நீங்கி மோக்ஷம், புண்ணியம் அடையலாமென்று கோவில் விக்கிர பூசைகளுக்குவேண்டிய கற்பனைச் சுலோகங்களினாலும், குப்பைக் கதைகளினாலும் நம்பிக்கைகளை உண்டு பண்ணி வந்திருக்கிறார்கள். மற்றவர்கள் பலவித தொழில்களினாலும் இழிவுள்ள கூலி வேலைகளினாலும் கஷ்டப்பட்டு ஜீவனம் செய்து வருவதில் பார்ப்பார்கள் சிக்கிக்கொள்ளாமல் கோவில் உற்பத்தியினாலும்,

மற்ற சடங்குகளினாலும், பிராமணரல்லாதவர்களுடைய பொருள்களினா லும், சுகமடைந்து பார்ப்பார்கள் பல கல்வியில் மேன்மையாகவும், பிராமணர்களென்றும், மற்றவர்களைக் கேவலமாகவும், சூத்திரர் சூத்திரச்சிகளென்றும், எல்லாப்பிராமணர்கள் புசித்த பிற்பாடு கடைசியில் மிச்சம் நாய்களுக்கு போடுவது போல் பிராமணரல்லாதவர்களுக்கு சாப்பாடு போடும்படியாயும் இழிவாகச் சொல்லி வருவது மாத்திரம் எல்லாருக்கும் நன்றாக நேரில் விளங்குகிறதே தவிர மற்ற மோக்ஷம், புண்ணியம் யார் அடைந்தார்களென்பது நேராகக் காட்டிச் சொல்லுவதற்கிடமில்லாமலிருக்கிறது.

கோவில் விக்கிரகாராதனைகளால் சொம்பேரித்தனத்தையும் பாவமுள்ள மூடத்தனத்தைப் பெருகச்செய்யுமேயொழிய மோக்ஷம் முக்தியடையமாட்டார்களென்றும், பாவம் நீங்காதென்றும், வேத உபநிஷத்துக்களினால் தெரியவருகின்றன.

கடவுள் எங்கும் இருக்கிறாரென்று வேதத்திலிருந்தாலும், விக்கிரகாராதனை பலதேவ பூசைகள் செய்வதற்கு வேதங்களில் விதிகள் இல்லை. விதிகள் இருப்பனவாக இந்துக்கள் நம்பி ஏராளமான பொருளையும், பொழுதையும், மனதையும் விருதாவாய் செலவழித்து, கோவில், கோபுரங்கள் கட்டுகிறார்கள். விக்கிரக பூஜைகள் செய்வது கடவுளை அவமானப் படுத்துகிறதாகவும், உயர்ந்த பதார்த்தங்களைக்கொண்டு பகவானைப் பூஜிப்பவனிடத்தில் பகவான் சந்தோஷமடையமாட்டாரென்றும், அநேகாயிரம் வருஷங்களாகச் சிரத்தையுடன் விக்கிரக ஆராதனையை விரும்பப்பட்டவர்கள் பக்தர்களைச் சார்ந்தவர்களல்ல மூடர்களென்றும், உலகத்தார் உபாசிக்கும் பரிமிதப்பொருள்கள் அதாவது கண்டனப்பொருள்கள் ஒருபொழுதும் பிரஹ்மமல்லவென்றும், உபநிஷத்துக்களாலும், தேவமுனி ருஷயோகீஸ்வரர்களாலும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனிப்போமாக.

## 28-வது அத்தியாயம்.

எங்கும் எல்லாப்பெண்டிர் புருஷர்கள் அதிகாலையில் அவரவர்களுடைய தேகத்தைச் சுத்திசெய்துகொண்டு மானிடர்களால் அமைக்கப்பட்ட கோவில் விக்கிரங்களைப் பூசிக்கும்படி வழக்கத்திற்குக்கொண்டு வந்தது நலமா? அல்லது பரமேசுவரனால் மானிட உற்பத்திக்குமுன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் பிரத்யக்ஷமான சூரிய நாராயணன் தகதக

வென்று அதிகாலையில் யாவருக்கும் தரிசனத்தைக் கொடுக்கப்பட்ட
கடவுளை மூடர்கள் முதலான விவேகிகளைத் தருமநீதி குணங்களுடன்
பூசித்துவரும்படி வழக்கத்திற்குக் கொண்டுவந்திருக்கும்பட்சத்தில் சிரேஷ்
டமா ? இதைச் சற்று விவேகியுள்ள கனவான்களே யோசிக்கத்தக்கதாம்.

## 29-வது அத்தியாயம்.

கடவுள் உபாசனையில் மனதை அன்போடு செலுத்தித் தியானிக்கப்
பட்ட மானஸ பூசையே சிரேஷ்டம். அவ்வித மானஸ பூசையால் பிரஹ்ம
பதவியைக் காண்கிறவரையில் பாவத்தையும், மூடத்தனத்தையும், பெரு
கச்செய்யும் விக்கிரகாராதனைகளில் மனதைச்செலுத்தவிடாமல் கடவுளுக்
க்குப்பிரியமுள்ள சத்கர்மங்களென்ற ஜீவகாருண்ய தர்மநீதிகுணவொழுக்
கங்களிலும் மாதா பிதா குரு தெய்வத்தைவணங்கும்படி புத்தியைச்செலுத்
திக்கொண்டுவந்தால் பக்தி ஞானம் நாளுக்குநாள் விருத்தியாயிக்கொண்டு
வருவதையும் 1-வது அத்தியாயத்திலிருந்து 29-வது அத்தியாயம் வரை
யில் எழுதிய அத்தியாயங்களுக்கு சத்தியார்த்தமாக வேதஸ்மிருதி சுலோ
கங்களினாலும் தேவமுனி ருஷிகளுடைய சுலோகங்களினாலும் அர்த்தம்
உள்பட 2-வது பாகத்தில் எழுதியிருக்கப்பட்டவைகளுக்கு நவீன பிராம
ணர்களினால் பரவியிருக்கும் அதர்ம குணங்களென்ற அஞ்ஞான குணங்
களை நீக்குவதற்காக ஜீவகாருண்ய தர்மநீதி குணங்களெனும் த்விஜப்ரகா
சிகா என்றதாகப் புத்தகத்திற்குப் பெயரிட்டு உலகத்தில் யாவருக்கும்
பகிரங்கமாக அறியும்பொருட்டும் ஒருவருக்கொருவர் வஞ்சனை பக்ஷபா
தங்களில்லாமல் யாவரையும் சமமாகப் பாவிக்கும்படியாயும், ஏழைகளை
யும் தாழ்ந்த ஜாதியாரையும் கேவலப்படுத்தாமலும், மகா பிரஹ்ம ஞானி
யான வேமந சதகத்தின்படிக்கும் கபிலர்அகவல்படிக்கும், சித்தூர் ஜில்லா
அதாலத்துகோர்ட்டுத் தீர்ப்பை அச்சிட்டு விற்றுக்கொண்டுவரப்பட்ட
புஸ்தகத்தின்படிக்கு, இக்காலத்திலுள்ள பார்ப்பாரப்பெண்டிர் புருஷர்கள்
ஜீவகாருண்ய மற்ற தாழ்ந்த ஜாதியர்களாயிருக்கப்பட்ட நவீன பிராமணர்
கள் சிரேஷ்டமானவர்களாக உலகத்தில் நம்பும்படி செய்வித்து, பிராமண
ரல்லாத பெண்டிர் புருஷர்களிடத்தில் பலவிதமானசகாயமும் வேண்டிய
திரவியங்களைச் சம்பாதித்துக்கொண்டு வருவதுமல்லாமல் (உண்ட வீட்
டுக்கு இரண்டகம் நினைக்கிறதுபோல்) பிராமணரல்லாதவர்களை தாழ்ந்த
ஜாதியாராக சூத்திரர் சூத்திரச்சிகளென்று பலவிதமாகக் கேவலப்படுத்
திக்கெண்டுவரும் பிராமணப்பெண்டிர் புருஷர்களுடைய அஞ்ஞான நீச
குணங்களை நீக்க பிராமணரல்லாதவர்களில் புத்திமான்களாயிருக்கும் கன
தனவான்களால் நல்லொழுக்கத்திர்க்குச் சீர்திருத்தும்படியானமுயற்சிகள்
செய்வார்களென்றும் சகலமான வருணஸ்தர்களுடைய பிள்ளைகளுக்கு
ஜீவனத்திற்கு வேண்டிய கல்விகள் கற்பிப்பதுடன் ஈச்சுவர உபாசனையின்

பொருட்டு வேதங்களையும், சத்தியம் தர்மநீதிகுணங்களையும் கற்பிக்கும்படி செய்து சன்மார்க்கவழியில் கொண்டுவருவார்களென்று பதிவுசெய்திருக்கும் இப்புஸ்தகத்தில் குற்றங்களேதேனு மிருக்கில் புத்திமான்கள் கவனியாமல் குணமாகக்கொண்டு ஒரு முறைக்கு பலமுறை வாசித்து கடவுளுக்குப் பிரியமுள்ள மெய்யான கிரியைகளைக் கவனித்தும் பொய்யான கிரியை களைக் கண்டித்துக்கொண்டும் வருவார்களென்று யாவரையும் மிகவும் பிரார்த்திக்கின்றனன்.

இப்படிக்கு,
தங்கள் விதேயன்,
இராயவேலூர் - பசுபுலேட்டி
அரங்கசாமி செட்டி,
நெ. 29, பாஷ்கால் நாயுடு தெருவு,
இராயவேலூர்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

*Present Address:—*
V. P. RANGASWMAY CHETTY,
*Goods Clerk,*
COONOOR. (Nilgiri Ry.)

# விளம்பரம்.

சகலமான சகோதரி, சகோதரரவர்களுக்கு தெரிவிப்பது யாதெனில் :—

1-வது அத்தியாய முதல் 29-வது அத்தியாய வரைக்கும், சில சமாதானங்களும், வேதஉபநிஷத்துகளும், தெலுங்கு, தமிழ் சுலோகங்களும், அர்த்தம் உள்பட ஆதாரவிதிகள் இரண்டாம் பாகத்தில் விவரிக்கப்படும்.

இப்படிக்கு,

வே. ப. அரங்கசாமி செட்டி,

நெ. 29, பாஷ்கால் நாயுடு தெரு,

இராயவேலூர்.